NSW GOVERNMENT | Education Public Schools






## சாலைப் பாதுகாப்புத் தகவல்கள்

**உங்கள் குழந்தைகள் பள்ளியிலிருந்து போக, வரப் பயணிக்கும்போது அவர்களின் பாதுகாப்புக்கு நீங்கள்தான் பொறுப்பாவீர்கள்.**

# பாதுகாப்பான பேருந்துப் பயணம்

பேருந்திலிருந்து இறங்கிய பின்னால் ஒரு குழந்தை காயம் ஏற்படும் பெரும் அபாயத்தில் இருக்கிறது.

**அபாயத்தைக் குறைக்க:**

- உங்கள் குழந்தைகளை பேருந்து நிறுத்தத்தில் சந்திக்கவும் – சாலையின் எதிர்ப்புறத்தில் எப்போதும் வேண்டாம்
- பேருந்து நிறுத்தத்தில் உங்கள் குழந்தைகளின் கைகளைப் பிடித்துக்கொள்ளவும்
- பேருந்து நிலையத்தில் காத்திருக்கும்போது சாலையின் விளிம்பிலிருந்து ஒரு சில அடிகள் பின்னே தள்ளி நிற்கவும்
- பேருந்து செல்லும்வரை காத்திருந்து, அதன்பின் சாலையைக் கடக்க ஒரு பாதுகாப்பான இடத்தைத் தேர்வு செய்யவும்.

**சாலையைக் கடப்பதற்குப் பின்வருவன போன்ற ஒரு பாதுகாப்பான இடத்தைக் தேர்ந்தெடுக்க உங்கள் குழந்தைகளுக்கு உதவுங்கள்:**

- பாதசாரிகள் கடக்குமிடம் அல்லது போக்குவரத்து விளக்குகள் (இருக்கும் பட்சத்தில்)
- எல்லா போக்குவரத்து வாகனங்களுக்கும் தெரியும்படியான வெட்டவெளிச் சாலைப் பகுதி.

நீங்கள் உங்கள் குழந்தைகளுடன் இருக்க முடியாமல் போனால், அவர்களைப் பேருந்து நிறுத்தத்தில் சந்திக்க ஒரு நம்பிக்கையான வயதுவந்தோர்களை ஏற்பாடு செய்யவும்.




### மேலதிக உதவிக்கு

பின்வரும் இணையத்திலுள்ள திணைக்களத்தின் சாலைப் பாதுகாப்புக் கல்வித்திட்டத்துக்குச் செல்லவும்: https://education.nsw.gov.au/road-safety-education அல்லது பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்

https://education.nsw.gov.au அதன்பின் சாலைப் பாதுகாப்புக் கல்வியைத் தேடவும்.